**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 589/2025**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. கிருஷ்ணவேணி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கிரிதரண்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், அம்பாத்துரை காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **34** |
| | | | **Dated** | : | **26.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 10), **திருமதி. கிருஷ்ணவேணி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது அம்பாத்துரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.11.2024ம் தேதி திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் காலை 10.30 மணிக்கு பணியில் இருந்தபோது, திண்டுக்கல் பேகம்பூர், தோமையார்புரம், ஜமாலியா நகரைச் சேர்ந்த இஸ்மாயில் மைதீன் மகன் கணவாய் பிச்சை என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரைப் பெற்று, நிலையக் குற்ற எண். 639/2024, சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ஆக வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு**

**செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

புகாரை யார் எழுதினார்கள் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி மெகராபானு எழுதி அசா. 1 கையொப்பம் செய்தார். புகாரை எங்கு வைத்து எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து 02.15 மணி நேரம் காலதாமதமாகத்தான் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால், அதை காலதாமதமாகக் கருத முடியாது. சம்பவம் நடந்து அரசு மருத்துவமனைக்கு போய்விட்டு, பிறகு வந்து புகார் கொடுத்து இருக்கிறார்கள். காலதாமதத்திற்கு நான் குறிப்பிடும் காரணம் நான் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல. அசா. 3, அசா. 1க்கு எவ்வாறு தகவல் தெரிவித்தார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் பெயர், விலாசம் பற்றி புகார்தாரர் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார் என்பதை புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏறப்டுத்திய வாகனம் யாருக்கு சொந்தமானது என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபருடைய அங்க, அடையாளங்களை புகார் மனுவிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சொல்லவில்லை என்றால், விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் மனு வழக்கிற்காக பின்னீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இறந்துபோன நபருக்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக இந்த முதல் தகவல் அறிக்கை பொய்யாக பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 26.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.03.26 15:06:06 +0530

**Chief Judicial Magistrate,**

**Dindigul.**